# “தர்மம் சர,,

ஜனவரி (15 .1.2026) • கும்பகோணம் • பிரதி-17


## ப்ரஹ்மஸ்ரீ குருராம கனபாடிகள் பேசுகிறார்



**சௌள ப்ரகரணம்***

குடுமி எனும் சிகை வைக்கும் ஸம்ஸ்காரத்திற்கு சௌளம் என்று பெயர். இது விதிப்படி வைக்கப்பட்டிருந்தால்தான் சூடாகரணம் என்று சொல்லத்தகுந்ததாகும். சிகையை யக்ஞோபவீதத்திற்கு சமமாக பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இதை பிறகு வேறுவிதமாக மாற்றி அமைக்கவோ, எடுத்துவிடவோ சாஸ்த்ரம் அனுமதிப்பதில்லை. திருப்பதி முதலிய க்ஷேத்ரங்களுக்குச் செல்பவர்கள் கூட ப்ரார்த்தனை இல்லாவிடில் சிகையை எடுக்கக் கூடாது. வீட்டிற்குக் கூரை போல, நம் தேஹமாகிய வீட்டிற்கு சிகை அவசியம் ஆகும்.

---

**சௌளத்துக்குப் பின் வருவது உபநயனம்.**

உப-சமீபத்தில், நயனம் – அழைத்துக் கொண்டு போகிறது. யாருக்கு ஸமீபத்தில் அழைத்துக் கொண்டு போகிறது? ஒருவனை குருவுக்கு ஸமீபத்தில் அழைத்துக் கொண்டு போகிறதுதான் உபநயனம்.

உபநயனம் செய்யவேண்டிய காலம் பிராம்மணனுக்கு கர்ப்பத்தைக் கூட்டி எட்டாவது வயசாகும்;அதாவது பிறந்து ஏழு வயஸு இரண்டு மாஸம் ஆனவுடன் பண்ண வேண்டும்.

உபநயன ஸம்ஸ்காரம் என்பதைச் செய்வதற்கே உத்தராயணம்தான் உரிய காலம் என்றும் ஸ¨ரியன் பூமியின் வடக்குப் பாதியில் ஸஞ்சரிக்கிற ஆறுமாஸத்திலேயே உபநயனம் செய்யவேண்டும்.

அதே மாதிரி 'மாசிப் பூணூல் பாசி படரும்' என்பதாக மாசி மாதத்தில் பூணூல் போடுவதை விசேஷமானதாகச் சொல்லியிருக்கிறது.

ஐந்து வயஸிலேயே உபநயனம் செய்யும் ஒரு வழக்கமும் உண்டு. 'அது காம்யோபநயனம்' எனப்படும். 'காம்யம்'என்றால் ஒரு இஷ்டத்தை உத்தேசித்தது என்று அர்த்தம். குழந்தை விசேஷ அபிவிருத்தி அடைய வேண்டுமென்று ஆசைப்பட்டால் இப்படி செய்யாததால் தோஷமில்லை. ஏனென்றால் மந்திரங்கள் நன்றாக ஸ்பஷ்டமாக உச்சரிக்க வருகிற காலத்தில், ஸம்ஸ்க்ருத ஞானம் இரண்டு வருஷமாவது ஏற்பட்டானதற்குப் பிறகு உபநயனம் பண்ணுவதே போதும்.

**உபநயன உதாரண புருஷர்கள் :**

இரண்டு தெய்வக்குழந்தைகள் மநுஷ்ய ரூபத்தில் அவதாரம் பண்ணினபோது, உபநயன ஸம்ஸ்கார விசேஷத்தாலேயே தங்கள் அவதார காரியத்தைப் பண்ணிக் காட்டின, என்று நான் நினைப்பது வழக்கம். வேத மதம் நலிவடைந்தபோது அதை புத்துயிர் கொடுத்து ஸ்தாபித்த சங்கரரும் ஞானஸம்பந்தரும்தான் அந்த குழந்தைகள். ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகளுக்கு பால்யத்திலேயே உபநயனமானதைப் பெரிய புராணத்தில் சொல்லியிருக்கிறது. “நான்மறை ஞான ஸம்பந்தன்” என்று அவரே வர்ணித்துக் கொண்டிருப்பதிலிருந்து நாலு வேதங்களையும் அவர் அத்யயனம் பண்ணினார் என்று தெரிகிறது. ஆசாரியாளுக்கும், ஞானஸம்பந்தருக்கும் ஒரு தரம் கேட்டாலே பாடமாய் விடும். ‘ஏக ஸந்தக்ராஹி’கள்.

**உபநயனம் தொடரும் .**

**ஸ்ரீமதி ஸௌம்யா குருராமன்**


# “இதிஹாஸம்” – “புராணம்”



ராமாயணமும் மஹாபாரதமுந்தான் நம் தேசத்தில் பாமர-பண்டித பேதமின்றி எல்லோருக்கும் இரண்டு கண்கள் போல இருந்து கொண்டு யுகாந்தரமாக நல்ல வழியைக் காட்டி வந்திருக்கின்றன. இந்த இரண்டையும் புராணங்களோடு சேர்க்காமல், தனி ஸ்தானம் கொடுத்து ‘இதிஹாஸ’ங்கள் என்று வைத்திருக்கிறது.

புராணம் என்று இருந்தால் அது சொல்ல வேண்டிய விஷயங்கள் ஐந்து இருக்கின்றன என்று பஞ்ச லக்ஷணம் கொடுத்திருக்கிறது. அவை: ஒன்று, ஸர்க்கம் (ஆதியில் நடந்த சிருஷ்டி). இரண்டு, ப்ரதி ஸர்க்கம் (அப்புறம் அந்த ஸ்ருஷ்டி யுகங்கள் தோறும் கவடு விட்டுக் கொண்டு பரவியது.) மூன்று, வம்சம் (பிரம்ம புத்ரர்களிலிருந்து ஆரம்பித்து ஜீவகுலம் எப்படி தலைமுறை தலைமுறையாக வந்தது என்ற விஷயம்.) நான்கு, மன்வந்தரம் (ஆயிரம் சதுர்யுகங்களில் லோகம் பூராவுக்கும் மநுஷ்யகுல முன்னோர்களாக இருக்கப்பட்ட பதினாலு மனுக்களின் காலத்தைப் பற்றிய விஷயங்கள்.) ஐந்தாவது, வம்சாநுசரிதம் (தேசத்தைப் பரிபாலித்த ராஜாக்களின் வம்சாவளி; ஸூர்ய வம்சம், சந்திர வம்சம் என்பது போன்ற dynasty -களின் விவரம்). இன்னம், பூகோள வர்ணனை, ககோள வர்ணனை என்பதாக லோகங்களைப் பற்றி விரிவாக வர்ணிக்க வேண்டும். இங்கே புராணம் என்பது ஹிஸ்டரியாக மட்டுமின்றி ஜியோகிராபியாகவும் ஆகிறது.

இதிஹாஸம்’ என்பது இதி-ஹ-ஆஸம். ‘இதி-ஹ-ஆஸம் என்றால் இப்படி நடந்தது என்று அர்த்தம். ‘இதி ஆஸம்’ என்றாலே ‘இப்படி நடந்தது’ என்றாலும், நடுவிலே ஒரு ‘ஹ’ போட்டிருக்கிறது. ‘ஹ’வுக்கு ‘நிச்சயமாக’, ‘வாஸ்தவமாக’, ‘ஸத்தியமாக’ என்று அழுத்தம் கொடுக்கிற அர்த்தமுண்டு. கொஞ்சங்கூடப் பொய் கலக்காமல் உள்ளது உள்ளபடியே எழுதினது ‘இதிஹாஸம்’. அது எழுதப்பட்ட காலத்திலேயே நடந்தது. ராமர் இருந்த போதே வால்மீகி ராமாயணத்தை எழுதினார். பஞ்ச பாண்டவர்கள் இருந்த போதே வியாசாரியாள் கூட இருந்து பாரதத்தில் வரும் ஸம்பவங்களை எல்லாம் நேரில் பார்த்தவர்.



## “அடிப்படை தர்மங்கள்”

வித்வான்
விரூபாக்ஷ சர்மா

ஸூர்யசந்திரர்களை உதயத்திலும் அஸ்தமன ஸமயத்திலும் க்ரஹணகாலத்திலும் வானத்தில் நடுவில் இருக்கும் போதும் நீரில் பிரதிபிம்பித்திருக்கும் போதும் பார்க்கக் கூடாது.

மண்முட்டு, பசு, தேவதை, பிராமணன், காவல்மரம், ஸ்தலவிருக்ஷம் இவற்றை வலமாகச் செல்லவேண்டும்.



ஶ்ரீ சர்மா சாஸ்திரிகள்

## வாக் தர்மம்

**(பேச்சுத் தூய்மை)**

**வாய்மையைத் தாண்டி, நாம் பேசும் விதம் எப்படி இருக்க வேண்டும்.**


இன்சொல்: பிறர் மனம் நோகாமல் பேசுதல் வேண்டும்.
அனாவசியப் பேச்சைத் தவிர்த்தல் வேண்டும்: தேவையற்ற விவாதங்கள் மற்றும் வதந்திகளைத் தவிர்ப்பது ஒரு தர்மமாகக் கருதப்படுகிறது.

மந்திர ஜபம்: வாக்கைப் புனிதப்படுத்த இறை நாமங்களை உச்சரித்தல் வேண்டும்.


---

வேங்கடேஷ்- பூர்வமீமாம்ஸா சிரோமணி

**கிருஷ்ண யஜுர்வேதத்தில் (தைத்திரீய சம்ஹிதை) விவரிக்கப்பட்டுள்ள, பலரும் அறியாத ஒரு சுவாரசியமான கதை "அசுரர்களின் மூன்று கோட்டைகளும் உபசத் இஷ்டியும்** . . முற்காலத்தில் அசுரர்கள் பூமியில் இரும்புக்கோட்டையும் ,வெள்ளிக்கோட்டை அந்தரிக்ஷத்திலும் , பொற்கோட்டை சொர்க்கத்திலும் அமைத்தனர்.இந்தக் கோட்டைகள் வெறும் கட்டிடங்கள் அல்ல, அவை தேவர்களின் யாக பலன்களைத் தடுத்து நிறுத்தும் ஆன்மீகத் தடைகளாக இருந்தன. தேவர்களால் தங்கள் முழு பலத்தைப் பயன்படுத்தியும் அவற்றை ஊடுருவ முடியவில்லை.தேவர்கள் இந்தக் கோட்டைகளை வெல்ல "உபஸதா" என்ற ஒரு சிறப்பு இஷ்டியை மேற்கொண்டனர். இந்தக் கோட்டைகளைத் தகர்க்க அவர்கள் ஒரு விசேஷமான அம்பை உருவாக்கினார்கள்: அந்த அம்பின் முனை: அக்னி தேவன். அம்பின் முள்: ஸோமன். அம்பின் தண்டு: மகாவிஷ்ணு என்பதாக அமைந்தது.







தேவர்கள் அந்த அசுரக்கோட்டைகளை நேரடியாக தாக்காமல், உபசத் என்ற இஷ்டியின் மூலம் ஒரு தபஸ் ஒன்றை உருவாக்கினார்கள். இந்த தபஸின் மூலமாக அசுரர்கள் உருவாக்கிய மூன்று கொட்டைகளையும் தகர்த்தெறிந்தார்கள்.


யஜுர்வேதம் இந்தக் கதையை வெறும் வீரக்கதையாகச் சொல்லவில்லை. இது ஒரு மனிதனின் மூன்று நிலைகளில் உள்ள தடைகளை விளக்குகிறது:
* இரும்பு (உடல் ரீதியான தடைகள்).
* வெள்ளி (மன ரீதியான குழப்பங்கள்).
* தங்கம் (ஆன்மீகத் தெளிவின்மை அல்லது அகங்காரம்).

ஒருவன் ஒரு செயலைச் செய்யும்போது, இந்த மூன்று நிலைகளிலும் ஏற்படும் தடைகளை 'உபஸத் ' போன்ற விடாமுயற்சியால் வெல்ல முடியும் என்பதை இது உணர்த்துகிறது.

**வேதப்பயிர் செய்து**
**வேதவாழ்வினைக்**
**கடைப்பிடித்தோம்**
**வேதங்கள் பாடுவாள்**
**காணீர்.**

நமது சந்ததியினர்
வேதங்களைக் கற்கும்
வாய்ப்பை
ஏற்படுத்தித்தருவோம்




**சீதலா குருராமன் கைவண்ணம்  கற்றவர் வியக்கும் கலைவண்ணம்**



மார்கழி அதிகாலை
வாசலில்  இட்ட கோலம்,
மதுரையை ஆண்ட
மல்யானையின் கம்பீரம்
கொண்டு மனதை
ஈர்க்குதே!

**நமது பாடசாலையில் காஞ்சி மஹாஸ்வாமிகள் ஆராதனை விழா விமரிசையாக நடைபெற்றது ..**



